Office of Principal Chief Conservator of Forests * Chennai-15 *
29 NOV 2019

M2

**சுருக்கம்**

பொதுப்பணிகள் – தமிழ்நாடு அமைச்சுப்பணி - வனத்துறை – கருணை அடிப்படையில் பணி நியமனம் - காலஞ்சென்ற ஓட்டுநர், (திரு).டி.முனிரத்தினம் என்பவரின் மகன் திரு.மு.நந்தகுமார் என்பவருக்கு கருணை அடிப்படையில் வழங்கப்பட்ட இளநிலை உதவியாளர் பணியை வரன்முறை செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**சுற்றுச்சூழல் – வனத்(வனம். 9)துறை**

**அரசாணை (டி) எண் : 307** | **நாள் : 25.11.2019**

**திருவள்ளுவர் ஆண்டு 2050**
**விகாரி, கார்த்திகை – 09**

**படிக்கப்பட்டன :**

முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் கடித எண்.எம்2/23711/2017, நாள். 02.07.2019.

-------------

**ஆணை:**

வனத்துறையில் முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் (துறைத் தலைவர்) அலுவலகத்தில், ஓட்டுநராகப் பணிபுரிந்த போது (திரு).டி.முனிரத்தினம் என்பவர் 17.01.2005 அன்று பணியிடை மரணமடைந்ததால், அவரது மகன் திரு.மு.நந்தகுமார் என்பவர் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்யப்பட்டு 13.11.2017 முற்பகல் முதல் முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் (துறைத் தலைவர்) அலுவலகத்தில் பணிபுரிந்து வருவதாகவும், அவரது பணியை வரன்முறை செய்து ஆணை வழங்குமாறும் முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் மேலே படிக்கப்பட்ட கடிதத்தில் அரசைக் கோரியுள்ளார்.

2. தனியர் இளநிலை உதவியாளர் பணிக்கான கல்வி மற்றும் வயது வரம்புத் தகுதியை அவரது தந்தை பணியிடை மரணமடைந்த நாளில் பெற்றுள்ளார். மேலும் கருணை அடிப்படையில் பணி நியமனத்திற்கான இதர தகுதிகளையும் பெற்றுள்ளார்.

3. முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் கருத்துருவை அரசு உரிய ஆவணங்களுடன் கவனமாக பரிசீலனை செய்தது. காலஞ்சென்ற ஓட்டுநர், (திரு).டி.முனிரத்தினம் என்பவரது மகன் திரு.மு.நந்தகுமார் என்பவருக்கு கருணை அடிப்படையில் வனத்துறையில் வழங்கப்பட்ட தற்காலிக இளநிலை உதவியாளர் பணியை, அவர் பணியில் சேர்ந்த நாளான 13.11.2017 முற்பகல் முதல் அப்பணியிடத்திற்குத் தேவையான உடற்தகுதியினைப் பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது இவ்வாறு முன் தேதியிட்டு பணிவரன்முறை செய்யப்படுவதால் ஆண்டு ஊதிய உயர்வு/ஊதிய நிலுவை ஏதுமிருப்பின் தனியர் அவற்றைப் பெற விதிகளின் படி தகுதியுடையவராகிறார்.

...2...

Scanned by CamScanner

4. இவ்வாணை தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் அ.சா.எண். 15079/Q1/2019–1, நாள்.07.11.2019 மற்றும் பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத்(ஜி) துறையின் அ.சா.எண். 37141/ஜி2/2019–1, நாள்.14.11.2019–ன் ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஷம்பு கல்லோலிகர்
அரசு முதன்மைச் செயலாளர்

<u>பெறுநர்</u>
முதன்மை தலைமை வனப்பாதுகாவலர்
(துறைத் தலைவர்),
சென்னை-15.
திரு.மு.நந்தகுமார்,
இளநிலை உதவியாளர்,
(வழி முதன்மை தலைமை வனப்பாதுகாவலர், சென்னை-15).

<u>நகல்</u>
தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை,
சென்னை-9.
பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை,
சென்னை-9.
இருப்புக் கோப்பு/உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

26/11/19
பிரிவு அலுவலர்
2/6
26/11/19

Scanned by CamScanner